# வேலூர் மாநகராட்சி

**வேலூர் மாநகராட்சி மைய அலுவலகத்தில் மாமன்ற கூட்ட அரங்கில் மாநகராட்சி சாதாரண கூட்டம் நாள் 03.01.2025 அன்று வெள்ளிகிழமை முற்பகல் 10.20 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் கூடுதலாக மேயர் அவர்கள் கொண்டு வரப்படும் டேபிள் தீர்மாணம்.**

## மாமன்ற கூட்டப்பொருள்

(1) வேலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு பொது நிதியின் கீழ் வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-1 முதல் 4 வரை உள்ள அரசு அலுவலகங்கள், பேருந்து நிலையங்கள், மாநகராட்சி நுண் உரக்கிடங்குகள், தெரு ஓரங்கள், கால்வாய்கள் மற்றும் பொது மக்கள் அதிக கூடும் இடங்கள் ஆகிய இடங்களில் நோய் தொற்று ஏற்படா வண்ணம் பொது சுகாதார பணிக்கு கிருமி நாசினியாக பயன்படுத்தப்படும் சுண்ணாம்பு தூள் 20000 கிலோ மற்றும் பிளிச்சிங் பவுடர் 8000 கிலோ ஆகிய கிருமி நாசினிகள் கற்பகம் கூட்டுறவு அங்காடி வேலூர் அவர்கள் வேலூர் மாநகராட்சிக்கு சப்ளை செய்ய ரு.4,55,000/- என விலைப்பட்டியல் அளித்துள்ளனர். எனவே, இம்மாநகராட்சிக்கு தேவையான சுண்ணாம்பு தூள் மற்றும் பிளிச்சிங் பவுடர் ஆகியவை அவசரம் அவசியம் கருதி மேற்கொண்டவாறு கற்பகம் கூட்டுறவு அங்காடி வேலூர் அவர்களிடம் வாங்கிக்கொள்ள ஆகும் செலவு தொகை ரு.4,55,000/-ஐ (ருபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம்) 2024-25 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் 2023 விதி எண்.248(1) அட்டவணையின் படி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.2665/2023/எச்1**

**தீர்மானம் எண்:- 345 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(2) வேலூர் மாநகராட்சி, பொன்னை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து **Pumping** செய்யப்படும் குடிநீர் **600mm PSC** பைப் மூலம் சத்துவாச்சாரி பூஸ்டர் மற்றும் பாலாறு பம்பிங் ஸ்டேஷன் வந்தடைகிறது. வரும் வழியில் எதிர்பாராத விதமாக ஏற்படும் விரிசல்கள் மற்றும் உடைப்புகளை சரிபார்க்க இம்மாநகராட்சி ந.க.எண்.1283/2024/இ1, நாள்.15.03.2024-ன்படி ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.சாந்தி என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணி

முடிக்க இரண்டு மாத காலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் ஒப்பந்ததாரரால் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணி முடித்த பின் மதிப்பீடு தயாரித்து உரிய நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வேலை உத்திரவு வழங்க போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், குடிநீர் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், மேற்படி பணியினை மேலும் மூன்று மாத காலத்திற்கு அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றும் அதே ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.9,63,503/- க்கு மேலும் மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. குடிநீர் அவசர அவசியத்தை கருதில் கொண்டும் வரும் கோடைகாலத்தை, கருத்தில் கொண்டும் அனுமதி வழங்கலாம்.
2. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. மேற்படி பணி செலவினத்தை பொதுநிதி 2023-24-ல் ஈடுசெய்து கொள்ளலாம்.

(ந.க.எண்.1283/2024/இ1/ம-2)

**தீர்மானம் எண்:- 346 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

(3) வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்.**TN 23 DB 6475** க்கு **Periodical Oil Servicing** பணிக்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.14,240/-க்கு 10.09.2024 அன்று நிர்வாக முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் **MAHINDRA BOLERO** நிறுவன தயாரிப்பு என்பதால் நேரடியாக **JAIN CARS AND AUTO SALES PVT** LTD., நிறுவனத்தில் **Periodical Oil Servicing** நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொதுநிதி 2024-25-ன் கீழ் செலவு செய்யலாம்.
3. **JAIN CARS** வாகனம் என்பதால் இதே நிறுவனத்தில் பணி நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.4993/2024/சி2)</u>

**தீர்மானம் எண்:- 347 - பதிவு செய்யப்பட்டது.**

(4) வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்.**TN 23 DB 6523** க்கு **Periodical Oil Servicing** பணிக்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16531/-க்கு 07.10.2024 அன்று ஆணையர் அவர்களின் அனுமதி பெறபட்டுள்ளது. இந்த வாகனம் **MAHINDRA BOLERO** நிறுவன தயாரிப்பு என்பதால் நேரடியாக **JAIN CARS AND AUTO SALES PVT LTD.,** நிறுவனத்தில் **Periodical Oil Servicing** நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. இப்பொருள் மாமன்றத்தின் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொதுநிதி 2024-25-ன் கீழ் செலவு செய்யலாம்.
3. **JAIN CARS** வாகனம் என்பதால் இதே நிறுவனத்தில் பணி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.6386/2024/சி2)</u>

**தீர்மானம் எண்:- 348 - பதிவு செய்யப்பட்டது.**

(5) வேலூர் மாநகராட்சி மண்டலம் 3-ல் **NUHM - 2023-24** திட்டத்தில் சலவன்பேட்டை பகுதியில், லஷ்மிபுரம் நகர்புற சுகாதார மையம் **(PHC)** முதல் தளத்தில் கட்டிடம் கட்டும் பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணி 80% முடிக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மருத்துவ அதிகாரிகள் விண்ணப்பம் அளித்தன் பேரில், இப்பணியினை ஆணையாளர் மற்றும் உதவிசெயற்பொறியாளர் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டதில், மருத்துவமனை மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில், கூடுதலாக தரைதளத்தில் இருந்து முதல் மாடிக்கு செல்லும் சாய்தளம் அமைத்தல் (Staircase Ramp), ஆண்கள், பெண்கள் கழிவறை, காத்திருப்பு கூடம் மற்றும் கீழ்தளத்திற்கு வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதன் பேரில் அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.29.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் பொதுநிதியின் கீழ் வழங்கலாம்.

<u>ந.க.எண்.1547/2024/இ1/ம3</u>

**தீர்மானம் எண்:- 349 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

(6) வேலூர் மாநகராட்சி மண்டலம் 3-ல் **SBM 2.0 2021-22** திட்டத்தில் கொசப்பேட்டை, புது அக்கிராவரம் பகுதியில் புதியதாக பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணியினை மாநகர பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில் மழைநீர் கால்வாய் **Wall Rasing, Washing Area Gril,** கழிப்பிடத்தின் முன்பகுதியில் சிமெண்ட் தளம், மற்றும் சில பணிகள் மேற்கொள்ள வேண்டி அறிவுறுத்தப்பட்டது. மேலும் புதியதாக கட்டப்பட்டுள்ள பொது கழிப்பிடம் பொதுமக்கள், பயன்பாட்டிற்கு கொண்டு வர மேற்படி பணிகள் செய்தால் மட்டுமே பயன்பாட்டிற்கு கொண்டு வர முடியுமென்பதால், அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.25 இலட்சம் ஆகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் பொதுநிதியின் கீழ் செலவு செய்யலாம்.

<u>ந.க.எண்.1545/2024/இ1/ம3</u>

**தீர்மானம் எண்:- 350 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

(7) வேலூர் மாநகராட்சி **NSMT** 2024-25 நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.4550/2024/SS3, நாள்:02.02.2024-ன்படி அனுமதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில் ஆணையர் வேலூர் மாநகராட்சி அவர்களின் ந.க.எண்.864/2024/இ3-ல் இப்பணிக்கு மறுஒப்பந்தப்புள்ளி 07.03.2024 அன்று இணையதளத்தின் வாயிலாக பெறப்பட்டதில் ஒப்பந்த விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதையும், மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு ரூ.லட்சத்தில்** | **ஒப்பந்ததாரர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Providing CC Road at Kalani kattu 3rd street (35016R0813) in Ward No:16 Avvaiyar Street (035031R1392) and Rama moorthy 6th Cross street (035031L0220) in Ward No:31 in Zone-IV Vellore Corporation. | 14.40 **Lakhs** | A.V. VINAYAHA MOORTHY<br><br>K. LAKSHMI | (0.01%) L1 குறைவு<br><br>(+0.28%) L2 அதிகம் | A.V. VINAYAHA MOORTHY, Vellore அவர்களின் L1-ல் - 0.01% மதிப்பீட்டுத் தொகையை விட குறைவான விலை விகிதத்தில் வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம். |

<u>அலுவலக குறிப்பு :-</u>

தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் 2023, விதி எண்.248(1) Table-II-ன்படி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>(ந.க.எண்.864/**2024/E3)**</u>

**தீர்மானம் எண்:- 351 - பதிவு செய்யப்பட்டது.**

(8) வேலூர் மாநகராட்சி, மண்டலம்-2, வார்டு எண்.35-ல் மெயின் பஜார் (கருவாடு மண்டி) சைதாப்பேட்டை சின்ன தெரு மற்றும் சைதாப்பேட்டை கன்னி கோயில் தெருவில் உள்ள மூன்று எண்ணிக்கை கொண்ட பயன்பாடற்ற கழிவறைகளை அப்புறப்படுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>(ந.க.எண்.2508/2024/இ1/ம-2)</u>

**தீர்மானம் எண்:- 352 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

(9) வேலூர் மாநகராட்சி, மண்டலம்-2, வார்டு எண்.34-ல் கன்னிகா பரமேஸ்வரி கோயில் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் மெயின் பஜார் மற்றும் சர்க்கார் மண்டி தெரு இணைப்பில் உள்ள சிறுபாலம் புதியதாக அமைக்கவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.17.00 இலட்சம் ஆகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்கான செலவினை தொகையை 15வது நிதிக்குழு 2024-25ல் மேற்கொள்ளலாம்.

<u>(ந.க.எண்.2509/2024/இ1/ம-2)</u>

**தீர்மானம் எண்:- 353 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

(10) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4ல் வார்டு எண்:17, புதிய மீன் மார்க்கெட் வளாகத்தில் UPVC Sheet Light Roofing With Truss Work பழுதடைந்து உள்ளது. அதனால் மழைக்காலங்களில் மழைநீர் மீன் மார்க்கெட் வளாகத்தில் தேங்கிவிடுகிறது. இதனால் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனை சரிசெய்ய பழுதுபார்த்து பராமரித்தல் பணிக்கு

மதிப்பீடு தொகை ரூ.23.70 லட்சம் ஆகும். இப்பணிக்கு நிர்வாக அனுமதி அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணிக்காக செலவினம் பொது நிதி 2024-25லிருந்து மேற்கொள்ளளாலம்

(ந.க.எண்.2127/2024/இ1)

**தீர்மானம் எண்:- 354 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(11) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 உள்ள 15 வார்டு பகுதிகளில் ஆழ்த்துளை கிணறுகளில் உள்ள பவர் பம்புகள் தொடர் இயக்கத்தின் காரணமாக பழுது ஏற்பட்டுள்ளது. இவற்றினை சீர் செய்து பொதுமக்களுக்கு குறைபாடின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பவர் பம்புகள் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்து மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ10.00 இலட்சமாகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3068/2024/E1)

**தீர்மானம் எண்:- 355 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(12) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்.16,17,31,32 மற்றும் 33 பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய் பழுது மற்றும் மெயின் பைப்லைன்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைப்புகள் உடனடியாக சீர்செய்திட வேண்டும். இவற்றினை சீர் செய்து பொதுமக்களுக்கு குறைபாடின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பழுதுகளை உடனடியாக சரி செய்து மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ5.00 இலட்சமாகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3293/2024/E1)

**தீர்மானம் எண்:- 356 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(13) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண். 40,41,42,43 மற்றும் 48 பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய் பழுது மற்றும் மெயின் பைப்லைன்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைப்புகள் உடனடியாக சீர்செய்திட வேண்டும். இவற்றினை சீர் செய்து பொதுமக்களுக்கு குறைபாடின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பழுதுகளை உடனடியாக சரி செய்து மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ5.00 இலட்சமாகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.3294/2024/E1)**

**தீர்மானம் எண்:- 357 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(14) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண். 48,49,58,59 மற்றும் 60 பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய் பழுது மற்றும் மெயின் பைப்லைன்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைப்புகள் உடனடியாக சீர்செய்திட வேண்டும். இவற்றினை சீர் செய்து பொதுமக்களுக்கு குறைபாடின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பழுதுகளை உடனடியாக சரி செய்து மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ5.00 இலட்சமாகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண். 3295/2024/E1)**

**தீர்மானம் எண்:- 358 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(15) வேலூர் மாநகராட்சி, மண்டலம் -4ல் வார்டு எண்:42ல் **SBM -2.0 2023-2024** திட்டத்தின் கீழ் Construction of Community Toilet Building at Kaspa Mariyamman Koil Street in Ward No.42, Zone – IV in Vellore Corporation. இப்பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.24.64 லட்சம் தயாரிக்கப்பட்டு 16.07.2024 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ந.க.எண்:1026/2023/இ2(19), நாள்:03.09.2024 அன்று திரு.என்.சீனிவாசன் DCE ,பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.புதியதாக பொதுகழிப்பிடம் அமைத்திட தற்போதுள்ள பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3282/2024/இ3)**

**தீர்மானம் எண்:- 359 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(16) வேலூர் மாநகராட்சி மண்டலம் -4 தமிழகம் முழுவதும் ஒருகிணைந்த சாலைப்பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சாலைப்பதிவேட்டில் மண்டலம் -4ல் 1973 சாலைகள் உள்ளன. இச்சாலைப்பதிவேட்டில் கீழ்க்கண்ட சாலைகள் விடுப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | சாலை தன்மை |
|---|---|---|---|
| 1. | 33 | ரெவின்யூ நகர் 1வது மெயின் ரோடு | மண் சாலை |
| 2. | 33 | ரெவின்யூ நகர் 1வது தெரு | மண் சாலை |
| 3. | 33 | ரெவின்யூ நகர் 2வது தெரு | மண் சாலை |
| 4. | 33 | ரெவின்யூ நகர் 3வது தெரு | மண் சாலை |
| 5. | 31 | வசந்தம் நகர் மெயின் ரோடு | சிமெண்ட்சாலை |
| 6. | 31 | வசந்தம் நகர் 10வது தெரு | மண் சாலை |

எனவே, மேற்கண்ட அட்டவணைப்படி விடுப்பட்டுள்ள சாலையினை சாலைப்பதிவேட்டில் இணைத்திட மாமன்ற ஒப்புதல் தேவைப்படுகிறது. எனவே, விடுப்பட்டுள்ள சாலைகளை சாலைப்பதிவேட்டில் இணைத்திட மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3284/2023/E1)

**தீர்மானம் எண்:- 360 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(17) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்: 58, வாட்டர் சர்வீஸ் தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.24.00 லட்சம் ஆகும். எனவே மேற்படி இப்பணிக்கு 15th CFC திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2024/இ1)

**தீர்மானம் எண்:- 361 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(18) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்:33, அண்ணா சாலையில் அமைந்துள்ள பொதுகழிப்பிடம் மற்றும் அம்மா உணவகம் பின்புறம் கழிவுநீர் கால்வாய் மற்றும் சுற்றுசுவர் பழுதடைந்துள்ளது. கழிவுநீர் கால்வாயில் நீர்த்தேக்கம் ஏற்படுகின்றது. எனவே, புதியதாக சுற்றுசுவர் மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.9.30 லட்சம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3281/2023/E1)

**தீர்மானம் எண்:- 362 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(19) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்:41, குடிநீர் நிதி 2024-25-ன் கீழ் சின்னைய்யா லேஅவூட் பகுதியில் வார்டு எண்:31, காமராஜர் நகர் பகுதியில் மற்றும் வார்டு எண்:33, ரெவின்யூ நகரில் பொதுமக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி புதியதாக பைப் லைன் பதித்தல் பணிக்கு திட்ட மதிப்பீடு தொகை ரூ.8.50 லட்சத்தில் தயாரிக்கப்பட்டு உள்ளது. இப்பணிக்கு குடிநீர் அவசர அவசியத்தைக் கருதி இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2837/2024/இ1)

**தீர்மானம் எண்:- 363 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(20) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்:31, SBM 2.0 திட்டத்தின் கீழ் கொணவட்டம் லால் பகதூர் சாஸ்திரி தெருவில் பழைய பஞ்சாயத்து அலுவலகம் தற்போது பொது சுகாதாரப்பிரிவினர் பயன்படுத்தி வருகின்றனர். இக்கட்டிடம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகும் தற்போது வலுவிழந்துள்ளது. கொணவட்டம் பகுதியில் வணிக நிறுவனங்கள் பல உள்ளன. மேற்கண்ட இடத்தில் பொதுகழிப்பிடம் வசதி இல்லை. எனவே, வலுவிழந்துள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி முன்புறப்பகுதியில் பொது சுகாதாரப்பிரிவு அலுவலர் பயன்படுத்தும் வகையிலும்

பின்பகுதியில் பொது கழிப்பிடம் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 40.96 லட்சம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் SBM 2.0 லிருந்து மேற்கொள்ளலாம்.
3. தற்போது உள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திட மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3419/2024/E1)**

**தீர்மானம் எண்:- 364 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(21) வேலூர் மாநகராட்சி பொது நிதியின் கீழ் வேலூர் மாநகராட்சி, 76வது குடியரசு தினவிழா (26.01.2025) முன்னிட்டு 25.01.2025 மற்றும் 26.01.2025 இரண்டு நாட்களுக்கு வேலூர் கோட்டை காந்தி சிலை, மைய அலுவலகம், மண்டலம் 1,2,3 மற்றும் 4 ஆகிய அலுவலக கட்டிடங்களில் சீரியல் செட் (வண்ண மின் விளக்கு அலங்காரம்) மற்றும் 25.01.2025, 26.01.2025 அன்று காலை 8.00 மணியளவில் மைய அலுவலகத்தில் நடைபெறும் கொடியேற்று விழாவிற்கு ஒலி பெருக்கி மற்றும் விழா மேடை,சேர்,தேசிய கொடி, பலூன் ஆர்ச், ஆகிய பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 4.00 லட்சம் ஆகும்.இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகை பொது நிதி 2024-25-ன் கீழ் செலவு செய்யலாம்

**(ந.க.எண். 3422/2024/E1)**

**தீர்மானம் எண்:- 365 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(22) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்:31, விவேகனந்தர் தெரு மற்றும் சந்தான ஈஸ்வரி கோவில் தெரு பின்புறம் உள்ள தெருக்களில் நான்கு சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் புதிய சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சமாகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் பொது நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண். /2024/E1)**

**தீர்மானம் எண்:- 366 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(23) வேலூர் மாநகராட்சி மண்டலம் -4 தமிழகம் முழுவதும் ஒருங்கிணைந்த சாலைப்பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சாலைப்பதிவேட்டில் மண்டலம்-4ல் 1973 சாலைகள் உள்ளன. இச்சாலைப்பதிவேட்டில் கீழ்க்கண்ட சாலைகள் விடுப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | சாலை தன்மை |
|---|---|---|---|
| 1. | 17 | கழினிகாட்டு தெரு மெயின் ரோடு | சிமெண்ட் சாலை |
| 2. | 17 | கழினிகாட்டு தெரு 1வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 3. | 17 | கழினிகாட்டு தெரு 2வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 4. | 17 | கழினிகாட்டு தெரு 3வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 5. | 17 | கழினிகாட்டு தெரு 4வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 6. | 17 | கன்சால்பேட்டை வனவாச நகர் மெயின் தெரு | சிமெண்ட் சாலை |

எனவே, மேற்கண்ட அட்டவணைப்படி விடுப்பட்டுள்ள சாலையினை சாலைப்பதிவேட்டில் இணைத்திட மாமன்ற ஒப்புதல் தேவைப்படுகிறது.எனவே, விடுப்பட்டுள்ள சாலைகளை சாலைப்பதிவேட்டில் இணைத்திட மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் பொது நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்

<u>(ந.க.எண். 3424/2023/E1)</u>

**தீர்மானம் எண்:- 367 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(24) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 எண்.16,17,31,32 மற்றும் 33 ஆகிய பகுதிகளில் ஆழ்த்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகள் தொடர் இயக்கத்தின் காரணமாக பழுது ஏற்பட்டுள்ளது. இவற்றினை சீர் செய்து பொதுமக்களுக்கு குறைபாடின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மின்விசை பம்புகள் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்து மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மத்ப்பீடு தொகை ரு 7.00 (ருபாய் ஏழு லட்சம் மட்டும்) ஆகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்.

<u>(ந.க.எண்.3057/2024/E1)</u>

**தீர்மானம் எண்:- 368 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(25) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 எண்.40,41,42,43 மற்றும் 56 ஆகிய பகுதிகளில் ஆழ்த்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகள் தொடர் இயக்கத்தின் காரணமாக பழுது ஏற்பட்டுள்ளது. இவற்றினை சீர் செய்து பொதுமக்களுக்கு குறைபாடின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சிறு மின்விசை பம்புகள் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்து மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மத்ப்பீடு தொகை ரு 7.00 (ருபாய் ஏழு லட்சம் மட்டும்) ஆகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.
2.இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்.

<u>(ந.க.எண்.3059/2024/E1)</u>

**தீர்மானம் எண்:- 369 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(26) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 எண்.48,49,58,59 மற்றும் 60 ஆகிய பகுதிகளில் ஆழ்த்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகள் தொடர் இயக்கத்தின் காரணமாக பழுது ஏற்பட்டுள்ளது. இவற்றினை சீர் செய்து பொதுமக்களுக்கு குறைபாடின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மின்விசை பம்புகள் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்து மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரு 7.00 (ருபாய் ஏழு லட்சம் மட்டும்) ஆகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3060/2024/E1)

**தீர்மானம் எண்:- 370 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(27) வேலூர் மாநகராட்சி **Water Supply /General Fund 2023-24 -** மண்டலம் -4 வார்டு எண்:31, பெங்களூர் சாலையில் 90mm PVC மற்றும் 100mm DI குடிநீர் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளது. எனவே, புதிய பைப்லைன் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.8.00 லட்சம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்:3280/2023/E1)

**தீர்மானம் எண்:- 371 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(28) வேலூர் மாநகராட்சி மண்டலம்-3ல் வார்டுஎண்:51 புண்ணிய கோட்டி தெருவில் உள்ள நகர்புற நல மையம் (UPHC) செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் பின்புறம் உள்ள கிணறு உள்ளது. அந்த கிணற்று சுற்றி பக்க சுவர் இல்லாமல் உள்ளதால் பாதுகாப்பின்றி உள்ளது. அவ்விட்த்தினை உதவி செயற்பொறியாளர் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில் கிணற்று பகுதியை சுற்றி பக்கசுவர், புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் Sintax Tank, Delivery Line, Hand Rails, GI Sheet, Grill Gate, Paver Block ஆகிய பணிகள் செய்ய தயார் செய்யட்ட மதிப்பீடு ரூ.8.50 இலட்சம் ஆகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் பொதுநிதி 2024-25ன் கீழ் செலவு செய்யலாம்.

ந.க.எண்:1548/2024/இ1/ம.3

**தீர்மானம் எண்:- 372 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(29) வேலூர் மாநகராட்சி மண்டலம்-3ல் வார்டுஎண்:51 சிவராஜ் நகர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேற்படி சமுதாயக் கழிப்பிடத்தை சரிசெய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் தொடந்து கோரிக்கை வைத்துள்ளார்கள். மேலும் அந்த கழிப்பிடத்தை உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்(பொ) ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட பழுதடைந்த சமுதாய கழிப்பிடம் பழுதுபார்த்தல் மற்றும் மராமத்து பணிகள் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் செய்யட்ட மதிப்பீடு ரூ.6.25இலட்சம் ஆகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. இப்பணிக்கான செலவினம் பொதுநிதி 2024-25ன் கீழ் செலவு செய்யலாம்.

ந.க.எண்:1548/2024/இ1/ம.3

**தீர்மானம் எண்:- 373 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(30) வேலூர் மாநகராட்சி மண்டலம்-3ல் வார்டுஎண்:36 பில்டர்பெட் நீர்தேக்க தொட்டிகளில் இருந்து **குடிநீர் பகிர்மான குழாய் (D-Main)** மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் ஆங்காங்கே குடிநீர் பகிர்மான குழாய் பழுது ஏற்பட்டுள்ளதால் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் பணி பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றினை சீர் செய்து பொதுமக்களுக்கு குறைபாடின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பகுதியில் புதியதாக **குடிநீர் பகிர்மான குழாய் (D-Main)** அமைத்து பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.20 இலட்சமாகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் குடிநீர்நிதி 2024-25ன் கீழ் செலவு செய்யலாம்.

**ந.க.எண்:1550/2024/இ1/ம.3**

**தீர்மானம் எண்:- 374 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(31) வேலூர் மாநகராட்சி மண்டலம்-3ல் வார்டு எண்:44, கிருஷ்ணா நகர் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான போஸ்ட் ஆபிஸ் தெருவில் உள்ள கதவு எண்:27, அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதால் மேற்படி குடியிருப்பு கட்டிடத்தை பழுது பார்தல் மற்றும் மராமத்து பணிகள் செய்யவேண்டி உள்ளது. மேலும் இக்குடியிருப்பு கட்டிடத்தை பழுது பார்த்தல் மற்றும் மாராமத்து பணிகள் செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவர தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.50 இலட்சமாகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் பொதுநிதி 2024-25ன் கீழ் செலவு செய்யலாம்.

**ந.க.எண்:1551/2024/இ1/ம.3**

**தீர்மானம் எண்:- 375 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(32) வேலூர் மாநகராட்சி மண்டலம்-3ற்குட்பட்ட விருபாட்சிபுரம் மற்றும் பாகாயம் ஆகிய பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகம் ஆணையர் அவர்கள் அறிவுரையின்படி நேராய்வு செய்யப்பட்டத்தில் அம்மா உணவக்த்தில் ஏற்பட்டு உள்ள அனைத்து பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பழுதுபார்ப்பு மற்றும் மராமத்து பணிகள் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சம் ஆகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கானசெலவினம் பொதுநிதி 2024-25ன் கீழ் செலவு செய்யலாம்.

**ந.க.எண்:1544/2024/இ1/ம.3**

**தீர்மானம் எண்:- 376 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(33) வேலூர் மாநகராட்சி மண்டலம்-3ல் வார்டு எண்:53 ஓட்டேரி பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேற்படி பொதுக்கழிப்பிடத்தை சரிசெய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் தொடந்து கோரிக்கை வைத்துள்ளார்கள். மேலும் அந்தகழிப்பிடத்தை உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைபொறியாளர்(பொ) ஆகியோர் நேரில் சென்று ஆய்வு

செய்யப்பட்டதில் மேற்கண்ட பழுதடைந்த பொதுக் கழிப்பிடம் பழுது பார்த்தல் மற்றும் மராமத்து பணிகள் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர தயார் செய்யட்ட மதிப்பீடு ரூ.5.00இலட்சம் ஆகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் பொதுநிதி 2024-25ன் கீழ் செலவு செய்யலாம்.

<u>ந.க.எண்:1549/2024/இ1/ம.3</u>

**தீர்மானம் எண்:- 377 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(34) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 தமிழகம் முழுவதும் ஒருங்கிணைந்த சாலைப்பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சாலைபதிவேட்டில் மண்டலம்-4ல் 1973 சாலைகள் உள்ளன. இச்சாலைப்பதிவேட்டில் கீழ்க்கண்ட சாலைகள் விடுப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண். | தெருவின் பெயர் | சாலை தன்மை |
|---|---|---|---|
| 1. | 40 | ஆர்.சி.சர்ச் ரோடு | தார் சாலை |
| 2. | 42 | காதர் வலி ஜண்டா 1வது குறுக்கு | மண் சாலை |
| 3. | 42 | காதர் வலி ஜண்டா விரிவு 1வது குறுக்கு | மண் சாலை |
| 4. | 42 | காதர் வலி ஜண்டா விரிவு ஜான் சர்ச் தெரு | மண் சாலை |
| 5. | 42 | கசாய் அப்துல் கரீம் 1வது குறுக்கு | சிமெண்ட் சாலை |
| 6. | 42 | கசாய் அப்துல் கரீம் தெரு | சிமெண்ட் சாலை |
| 7. | 42 | கசாய் அப்துல் கரீம் சந்து | சிமெண்ட் சாலை |
| 8. | 42 | கசாய் அப்துல் கரீம் 3வது குறுக்கு | சிமெண்ட் சாலை |
| 9. | 42 | ஒட்ட தாவுத் தெரு | சிமெண்ட் சாலை |
| 10. | 42 | காண்ராக்டர் ஷேக் அப்துல் காதர் தெரு | தார் சாலை |
| 11. | 42 | ஒத்தவாடை 3வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 12. | 42 | பச்சைப்பன் கவுண்டர் 1வது குறுக்கு தெரு | தார் சாலை |
| 13. | 42 | பச்சைப்பன் கவுண்டர் 2வது குறுக்கு தெரு | தார் சாலை |
| 14. | 42 | கத்திப் அப்துல் காதர் மசூதி தெரு | சிமெண்ட் சாலை |
| 15. | 42 | கத்திப் அப்துல் காதர் விரிவு 1வது தெரு | மண் சாலை |
| 16. | 42 | கத்திப் அப்துல் காதர் விரிவு 2வது தெரு | மண் சாலை |
| 17. | 42 | கத்திப் அப்துல் காதர் விரிவு 3வது தெரு | மண் சாலை |
| 18. | 42 | ஒட்ட தாவுத் தெரு 3வது குறுக்கு | சிமெண்ட் சாலை |
| 19. | 42 | ஜானி பூந்தோட்டம் 1வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 20. | 42 | ஜானி பூந்தோட்டம் 2வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 21. | 42 | ஜானி பூந்தோட்டம் 3வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 22. | 58 | திருவள்ளுவர் தெரு | சிமெண்ட் சாலை |
| 23. | 58 | திருவள்ளுவர் குடியிருப்பு 1வது வலது புறத்தெரு | சிமெண்ட் சாலை |
| 24. | 58 | திருவள்ளுவர் குடியிருப்பு 2வது வலது புறத்தெரு | சிமெண்ட் சாலை |
| 25. | 58 | திருவள்ளுவர் குடியிருப்பு 3வது வலது புறத்தெரு | சிமெண்ட் சாலை |
| 26. | 58 | திருவள்ளுவர் குடியிருப்பு கிழக்கு 2வது வலது தெரு | சிமெண்ட் சாலை |
| 27. | 58 | திருவள்ளுவர் குடியிருப்பு கிழக்கு 1வது வலது தெரு | சிமெண்ட் சாலை |
| 28. | 58 | திருவள்ளுவர் குடியிருப்பு பூங்கா தெரு | சிமெண்ட் சாலை |
| 29. | 58 | திருவள்ளுவர் குடியிருப்பு கடைசி தெரு | சிமெண்ட் சாலை |

| | | | |
|---|---|---|---|
| 30. | 58 | திருவள்ளுவர் குடியிருப்பு 4வது தெரு | சிமெண்ட் சாலை |
| 31. | 59 | வள்ளலார் 1வது குறுக்கு | சிமெண்ட் சாலை |
| 32. | 59 | வள்ளலார் 2வது குறுக்கு | சிமெண்ட் சாலை |
| 33. | 59 | குளக்கரை தெரு சின்ன சித்தேரி | சிமெண்ட் சாலை |
| 34. | 59 | பொற்கொடி அம்மன் கோவில் தெரு | சிமெண்ட் சாலை |
| 35. | 59 | சாமி நகர் | சிமெண்ட் சாலை |
| 36. | 59 | பாநீ ராம் நகர் | சிமெண்ட் சாலை |
| 37. | 59 | குமரவேல் நகர் 1வது தெரு | சிமெண்ட் சாலை |
| 38. | 59 | தென்றல் நகர் விஜய நகர் நர்சரி பள்ளி | சிமெண்ட் சாலை |
| 39. | 59 | நாராயண நகர் 1வது தெரு | மண் சாலை |
| 40. | 59 | நாராயண நகர் 2வது தெரு | மண் சாலை |
| 41. | 59 | துறைசாமி நகர் 1வது தெரு | மண் சாலை |
| 42. | 59 | வசந்தம் நகர் விரிவு 1வது தெரு | மண் சாலை |
| 43. | 59 | வசந்தம் நகர் விரிவு 2வது தெரு | மண் சாலை |
| 44. | 59 | வசந்தம் நகர் விரிவு 3வது தெரு | மண் சாலை |
| 45. | 59 | கணபதி நகர் | மண் சாலை |
| 46. | 59 | பாலாஜி நகர் | மண் சாலை |
| 47. | 59 | கலைஞர் நகர் 1வது தெரு | மண் சாலை |
| 48. | 59 | கலைஞர் நகர் 2வது தெரு | மண் சாலை |
| 49. | 59 | கலைஞர் நகர் 3வது தெரு | மண் சாலை |
| 50. | 59 | கண்ணன் நகர் | மண் சாலை |
| 51. | 59 | சரஸ்வதி நகர் 1வது தெரு | மண் சாலை |
| 52. | 59 | சரஸ்வதி நகர் 1வது தெரு | மண் சாலை |
| 53. | 59 | பழைய இ.பி.தெரு | மண் சாலை |
| 54. | 59 | புது தெரு | மண் சாலை |
| 55. | 59 | காமராஜர் நகர் 1வது குறுக்கு தெரு | சிமெண்ட் சாலை |
| 56. | 59 | ஷெரிப் நகர் | சிமெண்ட் சாலை |

எனவே, மேற்கண்ட அட்டவணைப்படி விடுப்பட்டுள்ள சாலையினை சாலைப்பதிவேட்டில் இணைத்திட மாமன்ற ஒப்புதல் தேவைப்படுகிறது. எனவே, விடுப்பட்டுள்ள சாலைகளை சாலைப்பதிவேட்டில் இணைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டுப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் பொதுநிதி 2024-25 லிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்:3283/2023/இ1)**

**தீர்மானம் எண்:- 378 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

(35) வேலூர் மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் செல்லியம்மன் கோயிலுக்கு சொந்தமான இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு பின்புறம் உள்ள 24மீ X 25மீ காலியாக உள்ள இடத்தில் சுமார் 250 இரு சக்கர வாகனங்கள் நிறுத்தம் வகையில் உள்ள காலி இடத்தினை இரு சக்கர வாகனம் நிறுத்துமிடமாக வாகனம் 1-ற்கு ரூ.10/- என நிர்ணயித்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் குத்தகைக்கு விடவும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.அ1/3425/2024/ம4)

**தீர்மானம் எண்:- 379 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

(35) வேலூர் மாநகராட்சி மண்டலம்-3 முக்கிய அண்ணா சாலை பகுதியில் இருப்பதாலும் வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கதிர் ஆனந்த் அவர்கள் வருகை புரிவதாலும் இரண்டு முக்கிய சிலைகள் இருப்பதால் அடிக்கடி மாலை அணிவிக்க முக்கிய அலுவலக தலைவர்கள் வருவதாலும் அலுவகத்திற்குள் உள்ள கோவிலுக்கு மக்கள் வருகை புரிவதால் அலுவக பாதுகாப்பிற்காக நுழைவு கேட் அருகில் Security Room, இருப்பது மிகவும் அவசியம் என்பதாலும் இருசக்கர வாகனம் நிறுத்த கூரை செட்டு, புதியதாக RO Plant 2 Nos, ஜெனரேட்டர் பழுதுபார்த்தல் மற்றும் உதவி ஆணையர் அவர்களின் அறையில் புதியதாக Air Conditioner, Chair 30Nos, Fan -4, Light, Executive Chair, கழிவறை, அறை பழுது பார்த்தல் மற்றும் அலுவலக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்பட்ட மதிப்பீடு ரூ.15.10 இலட்சம் ஆகும். எனவே, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கானசெலவினம் பொதுநிதி 2024-25ன் கீழ் செலவு செய்யலாம்.

<u>ந.க.எண்:1545/2024/இ1/ம.3</u>

**தீர்மானம் எண்:- 380 - அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**இடம் : வேலூர்,**

**நாள் :** 02.01.2025.

**மேயர்,**

**வேலூர் மாநகராட்சி.**